18.08.2022

# தன்னார்வ வேதியர் பயிற்சி

கிறிஸ்துவில் அன்பிற்குரிய அருள்தந்தையே,

நமது கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழுவின் புதிய முயற்சியாக கடந்த ஆண்டு தன்னார்வ வேதியர் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இதில் **38 நபர்கள்** கலந்துகொண்டு சான்றிதழ் பெற்றனர். தங்களுடைய பங்குத்தளங்களில் தங்களுக்கு மறைப்பணியில் உதவிட பணியாளர்களை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

**திருத்தந்தை பிரான்சிஸ்** அவர்களும் வேதியர் பணி முக்கியமானது எனவும், ஆகவே பயிற்சி அளித்து தன்னார்வ வேதியர்களை உருவாக்கிட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த ஆண்டும் **"தன்னார்வ வேதியர்களுக்கான" அடிப்படை உருவாக்கப் பயிற்சி ஒவ்வொரு மாதமும் முதலாம், மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3.00 மணி முதல் 5.30 மணி வரை திருச்சி நல்லாயன் நிலையத்தில் நடைபெறும். ஓராண்டு இறுதியில், சான்றிதழ் வழங்கப்படும்.**

ஆகவே மறைப்பணியில் ஆர்வமுள்ள நல்ல கத்தோலிக்க இளைஞர்கள், ஆசிரியப் பெருமக்கள், பணிபுரிவோர் மற்றும் பணி ஓய்வில் இருப்போரைத் தேர்ந்தெடுத்து, உற்சாகப்படுத்தி அனுப்பும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| **பயிற்சி தொடங்கும் நாள்** | : 04.09.2022 (ஞாயிறு) |
| **பயிற்சி நடைபெறும் நேரம்** | : பிற்பகல் 03.00 மணி முதல் 05.30 மணி வரை |
| **பயிற்சி நடைபெறும் இடம்** | : நல்லாயன் நிலையம், மேலப்புதூர். |

தோழமையில், ஆசியுடன்,

அருள்பணி. சு. மரியசூசை மேதகு. ச. ஆரோக்கியராஜ்